21st December 1956]

tion of enacting a legislation for the purpose is already engaging the attention of the Government, no separate action has been considered necesary on the memorandum.

Sri V. R. NAGARAJAN : ஹோட்டல் தொழில் ஒரு முக்கியமான தொழிலாக இருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் பெரிய ஹோட்டல்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் தேசீயமயமாக்கும் எண்ணம் நமது சர்க்காருக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஹோட்டல் தொழிலாளர்களுடைய குறைகளைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் அதன் விவரங்களை இங்கே சட்டசபையில் சமர்ப்பிக்கலாம். பெரிய ஹோட்டல்களை தேசீயமயமாக்கவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்தினிடம் இல்லை.

Sri M. KALYANASUNDARAM : ஹோட்டல் தொழிலாளர்கள் சம்பந்தமான ஒரு மசோதா தயாரிக்கும்படியாக பிரச்னை சர்க்காருடைய ஆலோசனையில் இருந்தது. அது எவ்வளவு வருஷ காலமாக இருந்து வருகிறது. இன்னும் எத்தனை வருஷ காலத்தில் அதைப்பற்றி முடிவு எடுப்பார்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எனக்குத் தெரிந்த வரையில் முன்பின் எத்தனை வருஷங்கள் என்று சொல்ல முடியாது. இரண்டொரு மாதங்களாகத்தான் இருந்துவருகிறது. கொஞ்ச நாட்களாகத்தான் அது பரிசீலனையில் இருந்துவருகிறது. சில மாதங்களில் அது சட்டமாகலாம்.

Sri S. RAMALINGAM : ஹோட்டல் சம்பந்தமாக ஹைகோர்ட் ஆர்டர் வந்ததால் அதாவது பெரிய ஹோட்டல்களில் வேலை செய்யும் தொழிலாளர்களை பாக்டரி சட்டத்தின் கீழ் கொண்டுவர முடியாது என்று தீர்ப்பளித்ததால் அந்தச் சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் எல்லாம் அவர்களுக்கு கிடைக்காமல் போய்விட்டன. அவர்களுக்கு நியாயமாக கிடைக்கவேண்டிய சலுகைகள்கூட அதாவது லீவு சலுகை முதலிய சாதாரண சலுகைகள்கூட கிடைக்காமல் போய்விட்டன. பல ஹோட்டல் முதலாளிகள் அங்குள்ள தொழிலாளர்களை சுரண்டுவதற்கு ஈடுபட்டு விட்டார்கள். மற்றும் அவர்களை வேலையை விட்டும் நீக்குவதற்கு முற்பட்டு விட்டார்கள். இன்னும் பல விதமான தொந்தரவுகளையும் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். அதனால் சட்டம் எவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவர வேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவரவேண்டும். அதற்காகவே சர்க்காரையும் சீக்கிரத்தில் சட்டத்தைக்கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட சட்டத்தை சட்டசபையின் முன்பாக எப்பொழுது கொண்டுவருவதற்கு சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அது விஷயத்தில் தவிர்க்கக்கூடிய தாமதம் ஒன்றும் இல்லை என்பதை கனம் அங்கத்தினருக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

Sri V. BALAKRISHNAN : கடை மசோதாவின் விதிகள் ஹோட்டல் தொழிலாளர்களுக்கும் அனுசரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதுவும் இப்பொழுது யோசிக்கப்பட்டுதான் இருக்கிறது.

Cyclone relief loan applications

* 395 *Q.*—Sri V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Ramanathapuram district has been given one month extension of time from 31st July 1956 for the disposal of the pending Cyclone Relief loan applications;

[21st December 1956

(b) whether additional grant has been made to meet all the sanctioned loan applications in that district; and

(c) if so, the amount of such additional grant?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes.

(b) Yes.

(c) An additional sum of Rs. 20 lakhs was provided.

SRI V. BALAKRISHNAN : புயல் ராமனாதபுரம் ஜில்லாவில் அடித்ததுபோல்தான் இதர ஜில்லாக்களாகிய தஞ்சை, திருச்சி ஜில்லாக்களிலும் அடித்தது. அதனால் இந்த சலுகையை என் தஞ்சை, திருச்சி ஜில்லாக்களுக்கும் அளிக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த சலுகை அந்த ஜில்லாக்களுக்குத்தான் கொடுக்கப்பட்டது. ஆனால் ராமனாதபுரம் ஜில்லாவில் சேதம் அதிகமாக ஏற்பட்ட காரணத்தால்தான் அங்கு அதிகமாகச் செலவுக்கு கொடுக்கப்பட்டது.

SRI R. V. SWAMINATHAN : May I know, Sir, the number of applications that were received in this entire period and also the number of applications pending prior to 31st July 1956?

THE HON. SRI M. A. MANICKAVELU : For the fortnight ending 15th September 1956, 22,551 applications were pending disposal. The special staff has been retained till 30th November 1956. Till 22nd October 1956 loans to the tune of Rs. 2,06,93,000 were sanctioned to Ramanathapuram district alone. Thirty-four applications were pending, and 350 revision petitions also were pending in Sivaganga taluk.

SRI P. CHELLATHURAI : பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடன் வேண்டும் என்று விண்ணப்பங்கள் போட்டு அவைகள் பட்டுவாடா செய்யப்படாமல் இருந்தால், அப்படி பட்டுவாடா செய்யப்படாமல் எஞ்சி இருக்கும் மனுக்களை என்ன செய்யும்படி அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

THE HON. SRI M. A. MANICKAVELU : திருச்சி ஜில்லாவில் 59 மனுககள்தான் பாக்கி. தஞ்சையில் 20 மனுக்கள். ஆனால் ராமனாதபுரத்தில் அதிகமாக இருந்தது. அதற்காகத்தான் அங்கே பணம் அதிகமாகக் கொடுக்கப்பட்டது. அங்குள்ள மனுக்களை எவ்வளவு துரிதமாக பட்டுவாடா செய்யப்படுமோ அவ்வளவு துரிதமாக பட்டுவாடா செய்யப் பட்டுதான் வருகிறது என்றுதான் நான் கருதுகிறேன்.

SRI R. V. SWAMINATHAN : May I know, Sir, by giving the extension of time by one month, any tangible results have been achieved in disposing of the pending applications in this one month?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. I should think so.

SRI G. GOVINDAN : ராமனாதபுரம் ஜில்லாவிலிருந்து அதிகப்படியான மனுக்கள் வந்தது என்பதும் அதிகப்படியான பணம் வேண்டியதாக இருந்தது என்பதையும் கனம் மந்திரி அவர்களும் சர்க்கார் அவர்களும் அறிவார்கள். அப்படி இருந்தால் அவர்களுக்கு உதவி செய்ய சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. A MANICKAVELU : அப்படி முன்வந்துதான் அதிகமாக பணம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.